

அ.தி.மு.க.வில் 16 ஆண்டுகள் ஒன்றிய கழக செயலாளராகவும், ஓ.பி.எஸ். கட்சி தொண்டர்களின் உரிமை மீட்பு குழுவில் மாவட்டச் செயலாளராகவும், 1989இல் எம்.ஜி.ஆருடைய துணைவியார் ஜானகி அ.தி.மு.க.வில் இரட்டைப் புறா சின்னத்தில் பவானி தொகுதி வேட்பாளராக போட்டியிட்ட பவானி கோவிந்தன் ஈரோடு மத்திய மாவட்ட கழகம் பெருந்துறையில் உள்ள தலைமை அலுவலகத்தில் 200க்கும் மேற்பட்ட அ.தி.மு.க.வினருடன் ஈரோடு மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் முன்னிலையில் கழகத்தில் இணைந்தார். நிகழ்வில் கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

# தஞ்சாவூர் மாவட்டத்தில் வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழுவினர் ஆய்வு!

தஞ்சாவூர், ஆக. 23 –

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழு (2024–2026), தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழு தலைவர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவினர், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், முன்னிலையில் தஞ்சாவூர் மாவட்டம் தொடர்பான தணிக்கை பத்திகள் குறித்து, துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டனர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுநிறுவனங்கள் குழு உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், துரை.சந்திரசேகரன், முனைவர்.எம்.எச்.ஜவாஹிருல்லா, மு.பெ.கிரி, ம.சிந்தனை செல்வன், வி.பி.நாகைமாலி, ஒய்.பிரகாஷ், முதன்மை செயலாளர் முனைவர் கி.சீனிவாசன், மற்றும் குழு அலுவலர் ம.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்திற்கு பின்னர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுநிறுவனங்கள் குழு தலைவர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் தெரிவித்ததாவது:–

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழு, தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்டது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் இயங்கும், நீலகிரி தெற்குத்தோட்டம் கிராமத்தில் வட்டக் கிடங்கையும், பிள்ளையார்ப்பட்டி சேமிப்புக் கிடங்கையும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கீழ் இயங்கும் திருமலைச்சமுத்திரம் 110/33 துணை மின் நிலையத்தையும், செங்கிப்பட்டி கிராமத்தில் இயங்கும் Medicare Enviro Systems Pvt Ltd. நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்தும், தஞ்சாவூர் கூட்டுறவு காலனியில் செயல்படும் சிறு பல்பொருள் அங்காடியின் செயல்பாடுகள் ஆகியவை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் செயல்பட்டு வரும் மருந்தகத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்து நோயாளிகளுக்கு மருத்துவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் மருந்து, மாத்திரைகள் வழங்கப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு செய்து, எந்த வேளையில் மருந்து மாத்திரை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை நோயாளிகள் புரிந்து கொள்ளும் வகையில் அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் என பணியாளர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், முத்துவீரகண்டியன்பட்டி ஊராட்சியில் ஆதிதிராவிடர் உயர்நிலைப் பள்ளியில் செயல்பட்டு வரும் மதிய உணவுத் திட்டத்தின் கீழ் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் மதிய உணவின் தரம் குறித்து ஆய்வு செய்து, அட்டவணையின்படி உணவு வகைகள் வழங்கப்படுகிறதா என்பதை ஆய்வு செய்து, மாணவ, மாணவிகளின் கற்றல் திறன்கள் குறித்து ஆய்வு செய்து, பள்ளிக்கு தேவையான அடிப்படை வசதி குறித்து ஆசிரியர் மற்றும் மாணவ, மாணவிகளிடம் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழுவினர்களால் கேட்டறியப்பட்டது.

தொடர்ந்து, தஞ்சாவூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடர்பாக துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் இன்று மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பொதுமக்களின் நலனுக்காக எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த திட்டங்களின் பயன்கள் ஏழை, எளிய மக்களிடம் கொண்டு சென்று சேர்ப்பது அதிகாரிகளின் செயல்பாடு முக்கிய மானது. இது ஏழை, எளிய மக்களுக்கு சேவை செய்ய அதிகாரிகளுக்கு கிடைத்த வாய்ப்பு. அதைப்பயன்படுத்தி அரசின் திட்டங்கள் ஏழை, எளிய மக்களுக்கு கிடைக்க செய்வதில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்தும், பணிகளை விரைந்து முடித்திட மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது. பணிகளை விரைந்து முடிக்க துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுநிறுவனங்கள் குழு தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

மேலும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 6 பயனாளிகளுக்கு ரூ.7,02,500 மதிப்பிலும், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு மகளிர் சுய உதவிக் குழுக்கள் வங்கி நேரடிக் கடன் 10 பயனாளிகளுக்கு ரூ.93,00,000 மதிப்பிலும், வேளாண்மைத் துறை சார்பில் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் 6 பயனாளிகளுக்கு ரூ.2,590 மதிப்பிலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் தையல் இயந்திரம் 2 பயனாளிகளுக்கு ரூ.13,380 மதிப்பிலும், தொழில் வணிகத் துறை சார்பில் புதிய தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.10,07,125 மதிப்பிலும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் LPG தேய்ப்பு பெட்டிகள் 3 பயனாளிகளுக்கு ரூ. 12,000 மதிப்பிலும், நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் புதிய குடும்ப அட்டை 5 பயனாளிகளுக்கும் என மொத்தம் ரூ.1,10,37,595 மதிப்பில் 29 பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழு தலைவர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் வழங்கினார்.

இக்கூட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், என்.அசோக்குமார், மாநகராட்சி மேயர்கள் சண். இராமநாதன், க.சரவணண், மாநகராட்சி துணை மேயர்கள் மரு.அஞ்சுகம் பூபதி, சுப.தமிழழகன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா. இராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



திருத்துறைப்பூண்டி நகரத்திற்கு உட்பட்ட வாக்குச்சாவடிகளில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையை மிகச்சிறப்பான முறையில் பணியாற்றி உறுப்பினர்களை சேர்த்த கழக உடன்பிறப்புகளுக்கு நகர கழக செயலாளர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.பாண்டியன் பரிசு வழங்கி பாராட்டினார். இந்நிகழ்வில் மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் எம்.சிக்கந்தர், முன்னாள் ஒன்றிய செயலாளர் முகில் ராஜேந்திரன், தகவல் தொழில் நுட்ப அணி சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர் ராகோ. உதயசூரியன் மாவட்டக் கழக பிரதிநிதிகள் டி.ஆர்.எஸ்.சக்திவேல் ஐ.ஜி.எஸ். ஜாகிர் உசேன், நகர அவை தலைவர் வி.சிதம்பரம், முன்னாள் கூட்டுறவு சங்க இயக்குனர் ஆர்.எஸ். சுந்தர் நகர துணை செயலாளர்கள் என்.கே.எஸ். செல்லப்பா டி.ரவி, பொருளாளர் செல்வ முத்துக்குமரன், நகர இளைஞர் அணி அமைப்பாளர் கோ.வசந்த் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆலவயல் சுப்பையா
### ஆகஸ்ட் 23 (2020)



கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, மாவட்ட பிரதிநிதி, மாவட்ட துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

திருமயம் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

பொன்னமராவதி ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராகவும், மாவட்ட திருக்கோவில்கள் அறங்காவலர் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# மாநிலப் பட்டியலுக்குக் கல்வி!
# நிகழ்த்திக் காட்டுவார் நம் முதலமைச்சர்!



கல்வி உரிமை என்பது அந்தந்த மாநில மக்களின், மாநில அரசின், மாநிலங்களின் கொள்கை முடிவாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில், மாநில கல்விக் கொள்கையை 2025 ஆவணத்தை வெளியிட்டு, நமது எதிர்கால இலக்கினை தெள்ளத் தெளிவாக விளக்கியிருக்கிறார் நம் முதலமைச்சர் அவர்கள்.

மாநில நலனில் அக்கறை கொண்ட அரசு என்பதற்கு, மாநில கல்விக் கொள்கை 2025 சிறந்த சான்றாவணம் மட்டுமல்ல; இதர மாநிலங்கள் கடைபிடிக்க வேண்டிய வழிகாட்டும் கொள்கைக் குறிப்பு என்றால் மிகையில்லை.

ஏனென்றால், கல்வி என்பது மாநில அரசின் பட்டியலில் தான் இருக்க வேண்டும். கடைகோடி மக்களையும் சென்றடைய வேண்டிய மின்சாரம், சாலைப் போக்குவரத்து, சுகாதாரம் போன்ற சேவைகளும், அது தொடர்பாக வளர்ச்சித் திட்டங்களும் கூட மாநில அரசின் கட்டுப்பாட்டில் தான் இருக்க வேண்டும். அப்படித்தான் நமது இந்திய அரசியலமைப்பே உருவாக்கப்பட்டது.

இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு, குடிமைச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டபோது இந்தியா முழுவதற்கும் ஒரே சீரான வளர்ச்சிக் கொள்கைதான் அமலானது என்பதை அறிவோம். மாநிலங்களில் செல்வாக்கு செலுத்திய அல்லது பொறுப்பேற்ற அரசியல் கட்சிகள், அதனுடைய தலைவர்கள், உறுப்பினர்கள் வழி அந்தந்த மாநிலத்திலும், அந்தந்த மாவட்டத்திலும் வளர்ச்சி ஏற்பட்டது என்கின்றன சமூகவியல் தரவுகள். அந்த வகையில், தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்கள் கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளன. அதேநேரத்தில் வட மாநிலங்கள் கல்வியில் நிறைவான வளர்ச்சி எட்டவில்லை. காரணம் அங்கு செல்வாக்கு செலுத்தியது தொலைநோக்கு பார்வையில்லாத அரசியல் சக்திகள் என சொல்லத் தேவையில்லை.

குடியரசின் முதல் பத்திருபது ஆண்டுகளை எடுத்துக் கொண்டால், தமிழ்நாட்டில் பெரியாரிய திராவிட சித்தாந்தத்தின் அடிப்படையில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதும், அதன் மூலம் பெற்ற ஊக்கம், தொடர் திட்டங்கள், முயற்சிகள் என எல்லாம் காரணம். 1967 ல் தமிழ்நாடு கண்ட மிகப்பெரிய அரசியல் எழுச்சிக்கு பின்னர், கல்வி வளர்ச்சியின் வேகம் , இந்திய அளவிலான சராசரியை விட அதிகம். அதேசமயத்தில், கல்விக்கான கட்டமைப்புகளை உருவாக்குவதிலும், சிறப்பான கல்வியை வழங்குவதிலும் வடமாநிலங்களில் உள்ள அரசுகள் கடும் தோல்வியை தழுவி இருந்தன. அப்போது தான் கல்வியை கையில் எடுக்க முடிவு செய்த ஒன்றிய அரசு, அதனை மாநில பட்டியலில் இருந்து பொதுப் பட்டியலுக்கு எடுத்துச் செல்கிறது.

**அவசரகாலத்தில் அவசர கோலத்தில்**

மாநிலங்களிடையே நிலவும் சமமற்ற வளர்ச்சியை சரி செய்வதற்காக, கல்வி பொதுப்பட்டியலுக்கு மாற்றியதாக ஒன்றிய அரசு அப்போது சொன்னது. இப்போதும் சொல்கிறார்கள். ஆனால், கிட்டத்தட்ட 50 ஆண்டுகளாக ஒன்றிய அரசால் அந்த இடைவெளியை சரி செய்ய முடியவில்லை என்பதே நிதர்சனமான உண்மை. பல்வேறு தரவுகளின் அடிப்படையில் பார்த்தால், மாநிலங்களிடையே கல்வி வளர்ச்சியில் இன்று வரை சமமற்ற தன்மையே நிலவுகிறது. உயர் கல்வி சேர்க்கை விகிதம் தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 50 சதவீதமாக உள்ளது. ஆனால், தேசிய அளவிலான சராசரி 28 சதவீதம்தான். இதை ஒன்றிய அரசின் புள்ளிவிவரங்களே சொல்கின்றன.



மருத்துவர்
**எஸ்.ஏ.எஸ். ஹபிசுல்லா**
தலைமைக் கழக செய்தித் தொடர்பு துணைச் செயலாளர்

பள்ளி இடைநிற்றலை அனுமதிக்காத நம் திராவிட மாடல் அரசு, உயர்கல்வி சேர்க்கையில் நீடிக்கும் தடைகளையும் நீக்கியிருக்கிறது. உயர்கல்வி சேரும் மாணவர்களின் நிதி சார்ந்த சுமைகளை பெருமளவு குறைத்திருக்கிறது. புதுமைப் பெண், நான் முதல்வன் போன்ற திட்டங்களுக்கு பின்னர் 202324 ஆண்டில் அரசுக் கல்லூரிகளில் சேர்க்கை 74 சதவீதம் அதிகரித்துள்ளது.

50 ஆண்டுகளாக பொதுப்பட்டியலில் கல்வி இருந்தாலும், மாநிலங்களில் செயல்படுத்தப்படும் கொள்கைகள் தான், கல்வி சார்ந்த வளர்ச்சிக்கு காரணமாக இருந்துள்ளது என்பதை , நிதி ஆயோக் வெளியிடும் புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. அப்படிப் பார்த்தால், கல்வியில் சிறந்து விளக்கக்கூடிய தமிழ்நாடு, கேரளா போன்ற தென் மாநிலங்களின் திட்டங்களைத்தான் ஒட்டுமொத்த இந்தியாவுக்கு பின்பற்ற வேண்டும் நாம் வலியுறுத்த முடியும்.

ஆனால், பல மொழிகள், இனங்கள், பண்பாடுகள், பழக்க வழக்கங்களை கொண்டுள்ள இந்தியாவில் 140 கோடி மக்களுக்கும் தேசிய கல்வி கொள்கை மூலமாக ஒரே மாதிரியான கல்வியைக் கொடுக்க முயலுவது முற்றிலும் தவறானது. அதனால்தான் நாம் அதை வலியுறுத்தவில்லை என்றாலும், நாம் கடைபிடிக்கும் சமூகநீதி சார்ந்த கல்வித் திட்டங்கள்தான் இன்று, கல்வியில் பின்தங்கியுள்ள மாநிலங்களின் தேவையாக உள்ளது.

**பாகுபாடற்ற மாநிலக் கல்விக் கொள்கை**

ஒன்றிய அரசின் தேசிய கல்வி கொள்கை என்பது பாரபட்சம் கொண்டது. ஆனால் தமிழ்நாடு அரசு கொண்டு வந்துள்ள மாநில கல்வி கொள்கை என்பது, அனைத்து குழந்தைகளும் எவ்வித பாகுபாடுமின்றி ஒரே மாதிரியான கல்வியை கற்கக்கூடிய வகையில் அனைவரையும் உள்ளடக்கிய கல்வி கொள்கையாக உள்ளது.

தேசிய கல்வி கொள்கையில், ஐந்தாவது மற்றும் எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத்தேர்வை அறிவித்திருப்பது இடைநிற்றலை ஊக்குவிக்கக்கூடியது. ஆனால் தமிழ்நாடு அரசின் கல்வி கொள்கை மாணவர்களை பள்ளியில் தொடர்ந்து படிக்க வழிவகை செய்கிறது. ஐந்தாம் வகுப்பில் படிக்காவிட்டால் 6ஆம் வகுப்பில் படித்துக் கொள்ளலாம், 6ஆம் வகுப்பில் சுமாராகப் படிக்கும் மாணவர் எனில், 7ஆம் வகுப்பில் படித்துக் கொள்ளலாம் என மாணவர்கள் தொடர்ந்து பள்ளியுடன் இணைந்து பயணிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி தருகிறது.

தமிழ்நாட்டில் காமராஜர் காலத்தில் இலவச மதிய உணவு அறிமுகப்படுத்தப்பட்டு, தலைவர் கலைஞர் காலத்தில் இலவச முட்டை என வளர்ந்து தற்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய ஆட்சி காலத்தில் இந்தியாவிற்கே முன்மாதிரி திட்டமான காலை உணவுத் திட்டம் அரசு பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய கல்வி கொள்கையில் இப்போது தான் மாணவர்கள் பள்ளிக்கு வந்து செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் குறித்து பேசவே செய்கிறது. 1996-97ஆம் ஆண்டில் முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞரால் இலவச பஸ் பாஸ் திட்டம் கொண்டு வரப்பட்டு, இன்று வரை நடைமுறையில் உள்ளது.

தமிழ்நாட்டில் பள்ளிக்குச் செல்லாத குழந்தைகளே இருக்கக்கூடாது என்பதற்காக, இலவச பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சீருடைகள், காலணிகள், புத்தக பை, வண்ண பென்சில்கள், காம்பஸ், மலைப்பகுதிகளில் கம்பளிசட்டை, மழைக்கால ஆடை, உறை காலணி, கால் உறை, புவியியல் வரைபடம் என்று பல பொருட்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

ஒன்றிய அரசு வெளியிடக்கூடிய அனைத்து கல்வி சார்ந்த அளவீடுகளிலும் முதன்மையில் உள்ள ஒரு மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. அப்படியிருக்கையில், தமிழ்நாடு அரசு, தான் முன்வைக்கும் கல்விக் கொள்கையை வழிநடத்த அனுமதிப்பதே சரியானதாக இருக்கும்.

உத்தரப்பிரதேசம், பீகார், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஒரே ஒரு ஆசிரியரை மட்டுமே கொண்டு செயல்படக்கூடிய ஆயிரக்கணக்கான பள்ளிகள் இயங்கி வருகின்றன. இது கல்வியில் ஒன்றிய அரசு வட மாநிலங்களில் என்ன மாதிரியான வளர்ச்சியைக் கொண்டு வந்துள்ளது என்ற கேள்வியை எழுப்புகிறது.

தேசிய கல்விக் கொள்கை மூலமாக மும்மொழிக் கொள்கையை வலுக்கட்டாயமாக திணிக்க ஒன்றிய அரசு முயல்கிறது. மூன்றாம் வகுப்பு படிக்கும் மாணவனுக்கு தான் 3வது மொழியாக எதைப் படிக்க வேண்டும் என்பதை தேர்ந்தெடுக்கவே முடியாது. ஆனால் அந்த மாணவனைக் கட்டாயப்படுத்தி குறிப்பிட்ட மொழியைத் திணிப்பது இந்தி திணிப்பு என்பதையும் கடந்து, தேவையில்லாத நேர விரயத்தை ஏற்படுத்துகிறது. எனவே மூன்றாவது மொழியாக எந்த மொழியையும் திணிப்பது தேவையற்றது.

**பயன்படுத்தப்படாத 'செஸ்'**

ஏற்கனவே நடைமுறையில் உள்ள கல்வி சார்ந்த திட்டங்களுக்கே ஒன்றிய அரசு முறையாக நிதி ஒதுக்குவது கிடையாது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமெனில், சமீபத்தில் ஒன்றிய கணக்குத் தணிக்கைத் துறையான சிஏஜி வெளியிட்ட தகவல்கள்படி, கல்விக்கு என வசூலிக்கப்பட்ட ரூபாய் 37 ஆயிரம் கோடி 'செஸ்' வரியை, கல்வி சார்ந்த திட்டங்களுக்கு ஒதுக்கப்படவில்லை என தெரிய வருகிறது. ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தின் மூலம் தெரிவித்த தகவல்கள்படி கடந்த 5 ஆண்டுகளின் செஸ் வரி வசூல் அதிகரித்தபோதிலும், அது சார்ந்த திட்டங்களுக்கு முறையாக ஒதுக்குவது கிடையாது என்பதும் தெரிகிறது. ஒன்றிய அரசு கல்விக்கு கொடுக்கும் முக்கியத்துவம் இதுதான் என்பது வெட்ட வெளிச்சமான நிலையில்,

நடைமுறைக்கு ஒத்து வராத, பாரபட்சமான மற்றும் இடைநிற்றலை அதிகரிக்கக்கூடிய ஒரு கல்வி கொள்கைக்கு மாற்றாக தமிழ்நாடு அரசின் மாநில கல்வி கொள்கையை விட்டுக்கொடுக்க வேண்டியதில்லை.

**குலக்கல்வி ஆபத்து**

மாநில கல்விக் கொள்கையானது அடுத்தடுத்து தேர்ச்சி அடையவில்லை என்றாலும், மாணவர்களை தொடர்ந்து பள்ளிக்கு வரவே ஊக்குவிக்கிறது. ஆனால் "விஷ்வ கர்மா" என்கிற திட்டத்தின் மூலமாக குலக்கல்வியை ஊக்குவித்துக் கொண்டே, தேசிய கல்விக் கொள்கை மூலம் இடை நிற்றலை அதிகரிக்கும் ஏற்பாடுகளையும் செய்கிறது ஒன்றிய அரசு. அதாவது, "உனக்கு படிப்பு வராது, அதனால் குடும்பத் தொழிலுக்குப் போ" என்பதுதான் அதன் சாராம்சம்.

தேசிய கல்விக் கொள்கையில் கல்வியை முன்னேற்றும் எந்த அறிவியல்பூர்வ திட்டமும் இல்லை. அடிப்படை ஆரம்பக் கல்வியில் வடமாநிலங்களில் பெற்றுள்ள பெரும் தோல்வியை, மற்ற மாநிலங்களில் வளர்ச்சியில், ஈடுகட்டுவது அறிவியல்பூர்வமானது அல்ல. அங்குள்ள ஆசிரியர்களுக்கு கூட சரியான கல்வித் திட்டம் இல்லை என தகவல்கள் உள்ளன.

ஒன்றிய அரசு கல்விக் கொள்கையை பிரம்மாண்டமாக காட்ட நினைக்கிறது. ஆனால் மாநில கல்வி கொள்கையானது வறுமையான மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களும் கூட எளிமையாக அணுகக்கூடிய வகையிலான திட்டங்களை வடிவமைத்துள்ளது.

ஒன்றிய அரசின் தேசிய கல்வி கொள்கையோடு ஒப்பிடும் போது, தமிழ்நாடு கல்வியில் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளதோடு, புதுமையான திட்டங்களைக் கொண்டுள்ளது.

மாணவர்களின் கல்வித் தேவையும், கட்டமைப்பும் மாநிலத்திற்கு, மாநிலம் வேறுபடும் நிலையில், ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் ஒரே மாதிரியான கல்வி கொள்கையை கொண்டு வந்தே தீருவோம் என ஒன்றிய அரசு அடம்பிடிப்பது, நிர்வாக ரீதியில் ஏற்றுக்கொள்ள முடியாதது. கூட்டாச்சி முறைக்கும் நேரெதிரானதாகும். கல்வி வளர்ச்சி, வரலாற்றுத் தரவுகளைக் கருத்தில் கொண்டு பொதுப்பட்டியலில் உள்ள கல்வியை மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வருவதே சாலச்சிறந்தது. அதை நிகழ்த்திக் காட்டுவார் நம் முதலமைச்சர்.